# காப்பியக் கட்டமைப்பில் இளங்கோவடிகளின் கலைத்திறன்

# The Artistry of Ilangovadigal's in Epic Structure

***முனைவர் தோ. நிஷா***
உதவிப் பேராசிரியர், தமிழாய்வு மையம்
ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி)
நாகர்கோவில்

**Dr. T. Nisha**
*Assistant Professor, Tamil Research Center*
*Scott Christian College (Autonomus), Nagercoil*

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழரின் ஒப்பற்ற இலக்கிய வளத்திற்கு சான்றாதாரமாகவும் தமிழின் முதல் தன்னிகரற்ற காப்பியமாகவும் அமையும் சிலப்பதிகாரம் குறித்த ஆய்வுகள் இன்றளவும் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. திருக்குறளுக்கு அடுத்து சிலப்பதிகாரத் திறனாய்வு நூல்கள் மிகுந்திருக்கின்றன. சிலப்பதிகாரத்தை நுணுகி ஆராயும்போது இளங்கோவடிகளின் கலைத்திறனில் புதுமைகள் வெளிப்படுகின்றன. வாசகனின் உணர்வுக்கேற்றவாறு காப்பியத்தை இளங்கோவடிகள் செதுக்கியுள்ளார். அதாவது கோவலன், மாதவி, பாண்டியன் என்ற மூவரையும் குற்றம் புரிந்தவர்களாகவும், குற்றமில்லாதவர்களாகவும் எதிரெதிர் நிலையில் படைத்துக் காட்டியுள்ளார். இலக்கியப் படைப்பை தன்னிறைவானதாக படைத்து வெற்றி கண்டுள்ளார். அவ்வகையில் காப்பியக் கட்டமைப்பில் இளங்கோவடிகளின் கலைத் திறன் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.*

***முக்கியச் சொற்கள்:***

*சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், கலைத் திறன், தன்னிறைவு. இலக்கியப்படைப்பு*

**Abstract**

*Studies on Silapathikaram are still going on today which was the evidence for the incomparable literary wealth of Tamilians and as the first unparalleled epic in Tamil. After Thirukural there are lot of criticism books in Silapathikaram. When analyzing the silapathikaram, innovations emerges in his artistry. Illangovadigal has carried the literary work to suit the readers sense. That is, the status of Kovalan, Mathavi, Pandian as the culprits, blameless are also created in the opposite position. He has suceeded in creating literary work on his own. Thus how the Illangovadigal's Artistry is emerges is to explore how is manifests itself is the purpose of this article.*

***Keywords:***

*Silapathikaram, Ilangovadigal, Literary creation, Artistry, Self Sufficiency*

**Citation**

Nisha, T. "The Artistry of Ilangovadigal's in Epic Structure." *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 2, 2021, pp. 1–7.

**முன்னுரை**

*தமிழ்மொழியின் முதல் பெருங்காப்பியமான சிலப்பதிகாரம் நெஞ்சையள்ளுவதாய், திகட்டாததாய், புதுப்புது ஆய்வுகளுக்கு வித்திடுவதாய் அமைந்துள்ளது. தமிழின் முப்பெரும் பிரிவுகளான இயல், இசை, நாடகம் என்ற மூன்றினையும் உள்ளடக்கிய தமிழரின் வாழ்வைப் படம்பிடித்துக் காட்டுவதாய் விளங்குகிறது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இளங்கோவடிகளால் எழுதப்பட்ட இப்பேரிலக்கியத்தைப் போன்ற சிறப்புடைய இலக்கியம் இந்நாள்வரை எழுதப்படவில்லை என்பதே இப்பெருங்காப்பியத்தின் சிறப்பாகும்.*

**இளங்கோவடிகளின் காப்பியக் கலைத்திறன்**

*சிலப்பதிகாரப் பாத்திரங்கள் யாவும் இன்றையளவும் பாமர மக்களிடையேயும், பிரபலமாக பேசப்படுகின்றனர். இக்கதாபாத்திரங்களில் கோவலன், மாதவி, பாண்டிய மன்னன் ஆகியோர் ஏதோ வகையில் படிப்பவர் மனதில் தவறிழைத்தவர்களாகப் பதிந்து விடுகின்றனர். ஆனால் இளங்கோவடிகளின் மதிநுட்பம் இவர்களையும் தீதற்றவர்களாகக் காட்டுகிறது. அதுவும் மாதவியைத் தூற்றிய கோவலனே மாதவியைக் குற்றமற்றவள் என்கிறான். தன் கணவனைக் கொலை செய்த பாண்டிய மன்னனை கண்ணகியே குற்றமற்றவன் என்கிறாள். கோவலனை மாடலன் கருணை மறவ, இல்லோர் செம்மல், செல்லாச் செல்வ எனப் புகழ்ந்துரைக்கிறான். இவ்வாறு இளங்கோவடிகள் காப்பியத்தைச் செம்மையுற கட்டமைத்துள்ளார். இதனை, ''இளங்கோவடிகளின் சிலம்பில் வெளிப்படையான பொருளும் உண்டு கரந்து வரு பொருளும் உண்டு. இரண்டும் பின்னிப் பிணைந்து வருமாறு யாப்பது தான் மிகச் சிறந்த இலக்கியப் படைப்பு. இப்படைப்புத் திறனை நாம் சிலம்பில் காண்கிறோம்.'' (ஆ. பழநி, சிலப்பதிகாரக் காப்பியக் கட்டமைப்பு, ப.312) என்று பழநி கூறுகிறார். சிலப்பதிகாரத்தின் முழு வெற்றியே இளங்கோவடிகளின் இம் மதிநுட்பத்தில் அடங்கியிருக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.*

**தீதிலா கோவலன்**

*கோவலன் கதாபாத்திரத்தைப் படிக்கும்போது பல்வேறு எதிர்மறைச் சிந்தனைகள் எழுவது இயல்பாகும். ஏனெனில் திருமணம் முடிந்து கண்ணகியோடு இல்லற இன்பத்தில் திளைத்துக்கொண்டிருந்த கோவலன், அத்திருமண மகிழ்வு மாறுமுன் மாதவியிடம் அடைக்கலம் புகுந்துவிட்டான். ''கண்ணகியிடம் இல்லாத எது மாதவியின்பால் அவனை ஈர்த்தது என்று மேலோட்டமாகப் பார்க்கிறபொழுது அவள் ஆடல் கலை, அழகு என்பதைத் தவிர வேறு எந்த காரணத்தையும் காப்பியம் சொல்லவில்லை என்பது வெளிப்படை.''* (http://www.shanlaxjournal.com) *இவ்வாறு மாதவியிடம் அடைக்கலம் புகுந்து, அவளது ஆயிரத்து எட்டுக் களஞ்சுப் பொன்னை வாங்கி, மாதவியின் பின்னால் சென்றான். இதனை,*

***''............ மயங்கி***
***விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்***
***வடுநீங்கு சிறப்பின்தன் மனைஅகம் மறந்து''***

***(சிலப். அரங்கேற்றுக்காதை, 173-175)***

*என்ற வரிகளில் குற்றமற்ற சிறப்பினையுடைய தன் மனைவியின் நினைவையே தன் சிந்தையில் ஏற்காமல் மாதவியை விட்டுப் பிரியாத மனதை உடையவனாய் மாறிவிட்டான் என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.*

*கோவலன் பிரிந்த கண்ணகியின் நிலைமையைப் படிக்கும்போது கோவலன் மீது வெறுப்பு ஏற்படுமாறு உள்ளது. தன் பாதங்களை அழகுபடுத்துகின்ற சிலம்புகள் இல்லாதவளாய், தன்னை எவ்விதத்திலும் அழகு படுத்தாமல் வருந்துகிறாள்.*

***“கையறு நெஞ்சத்துக் கண்ணகி அன்றியும்”***

***(அந்திமாலை சிறப்புச் செய் காதை, 57)***

*என்ற வரிகளில் செயலிழந்த நெஞ்சத்துடன் தன் கணவனை விட்டுப் பிரிந்து நிலவுக் காலத்தில் தனிமைத் துயராலே வருந்தியிருக்கிறாள். இவ்வாறு வருந்தியிருந்த கண்ணகி மாதவியிடமிருந்து திரும்பி வந்த கோவலன் அழைத்த உடன் மதுரைக்குக் கோவலனுடன் புறப்பட்டு வந்தாள். வந்த இடத்தில் கோவலனுடன் பேசும்போது தனது துயரைத் தெரிவிக்கிறாள்.*

***“அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்,***
***துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின்***
***விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை”***
***................................................***
***போற்றா ஒழுக்கம் புரிந்தீர் யாவதும்***
***மாற்றா உள்ள வாழ்க்கையேன்!***

***(கொலைக்களக் காதை, 71-82)***

*கோவலன் தன்னைப் பிரிந்ததால் இல்லறக் கடமைகளை என்னால் ஆற்ற இயலவில்லை எனவும், பெற்றோர் மிகவும் வருந்தினர் என்பதையும் தெரிவித்து செய்யக் கூடாதத் தவறைச் செய்துவிட்டீர். ஆனால் நானோ நும்மீது கொண்ட அன்பினால் அழைத்தவுடன் வந்தேன் என்று கூறுகிறாள். இதனைப் படிக்கும்போது கோவலன் கண்ணகிக்கு பெருந்தவறிழைத்தவன் என்றே எண்ணத் தோன்றுகிறது. ஆனால் கோவலன் இத்தவற்றைச் செய்திருந்தாலும் கோவலன் மீது நாம் பரிவு கொள்ளும்படி இளங்கோவடிகள் அமைத்திருப்பது சிந்திக்கத்தக்கதாகும்.*

*தவறிழைத்தவன் தன் தவற்றுக்காக வருந்தும்போது அவன் மீது இரக்கம் ஏற்படுவது இயல்பானது, “கோவலன் கண்ணகியின் உடல் சோர்வையும், உள்ளத் துயரையும் உணர்ந்தான். தன் தீச்செயல் குறித்து வருந்தினான்”(சாமி. சிதம்பரனார், சிலப்பதிகாரத் தமிழகம், ப.22). அவ்வாறே கோவலனும் கண்ணகியிடம் தன் தவறுக்காக வருந்துகிறான். அவ்வருத்தத்தைப் படிக்கும் போதே கோவலன் மீது மரியாதை ஏற்படுகிறது.*

***“இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்;***
***சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்;***
***வழு எனும் பாரேன்; மாநகர் மருங்கு ஈண்டு***
***எழுக என எழுந்தாய்; என் செய்தனை?***

***(கொலைக்களக்காதை, 67-70)***

*பெற்றோருக்கும், மாதவிக்கும், கண்ணகிக்கும் தவறிழைத்தேன் எனக் கூறும்போது கோவலன் தீதற்றவன் என்ற எண்ணம் ஏற்பட காப்பியத்தைச் செதுக்கியுள்ளார் இளங்கோவடிகள். “கதைத் தலைவனாகிய கோவலன், தொடக்கத்தில் பெருமைக்கு உரிய*

*செயல் ஒன்றும் செய்யாமையால், அவன் இறந்த பின், காப்பியத்தைப் படிப்பவர்க்கு அவன் மேல் இரக்கமோ - பரிவோ ஏற்படாது என்பதற்காக, அவன் மாபெருஞ் சிறப்புச் செயல்கள் (சாதனைகள்) புரிந்துள்ளான் என ஆசிரியர் இளங்கோ அடிகள், அடைக்கலக் காதையில், மாடலன் என்பவன் வாயிலாகக் கோவலனுடைய சிறப்புச் செயல்கள் பலவற்றை அறிவித்துள்ளார் என்று பலரும் கூறுவதுண்டு'' (முனைவர் சுந்தர சண்முகனார், சிலம்போ சிலம்பு, ப.187) மேலும் கோவலனும், கண்ணகியும் மதுரை வரும் வழியில் மாடலன் வருகின்றான்.*

*மதுரை வரும் வழியில் தலைச் செங்கானம் என்னும் ஊரினைச் சேர்ந்த மாடலன் மாதவ முனிவனின் பொதியமலையிலும், குமரியிலும் நீராடிவிட்டு இவர்களிடம் வருகிறான். அவ்வாறு வந்த மாடலன் தன்னை அறிமுகப்படுத்தியபின், கோவலனைக் குறித்து பேசுகிறான். மணிமேகலைக்குப் பெயரிடும் நாளில் முதிய அந்தணனை யானையிடமிருந்து காப்பாற்றி கருணை மறவனாக விளங்கினான். கீரிப்பிள்ளையைக் கொன்ற மனைவியைப் பிரிந்து சென்ற கணவனைத் தேடிக் கண்டுபிடித்து இருவரும் இணைந்து வாழ உதவி செய்து செல்லாச் செல்வனாக விளங்கினான். புதத்திடம் அகப்பட்டவனின் பெற்றோர்க்கு உதவி செய்து இல்லோர் செம்மலாக திகழ்ந்தான் எனக் கூறி இப்பிறப்பில் கோவலன் செய்தவை யாவும் எனக்குத் தெரிந்து நல்வினைகளே என்று கூறுகிறான்.*

***“இம்மைச் செய்தன யானறி நல்வினை***
***உம்மைப் பயன்கொல், ஒருதனி உழந்து, இத்***
***திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது,***
***விருத்தகோ பால!”***

***(அடைக்கலக்காதை, 91-94)***

*எனக் கூறி கோவலனைக் கற்போர் மனதில் கோபுரமாய் உயர வைக்கிறார் இளங்கோவடிகள். கோவலன் மீது இருந்த கோபம் அனைத்தையும் அடைக்கலக்காதையில் மாற்றிவிட்டு கோவலனின் கொலைக்கு இரங்கும்படி செய்து விடுகிறார். ''தன் தவறுகளிலிருந்து படிப்படியாக விடுபட்டு உயர்ந்து நிற்கும் கோவலன் உயர்வையும், தலைமைப்பாட்டையும் கருதியே, இளங்கோவடிகள் அவனை ''உயர் பேராளன்'' எனக் குறிக்கின்றார்'' (க. முத்துச்சாமி, ஆ. முத்தையா, சிலம்பில் அவலம், ப.97) மேலும், மாதவியின் இரண்டாவது கடிதத்தைக் கொணர்ந்த கோசிகன் கோவலனைத் தேடிக் கண்டுபிடித்த உடன், குற்றமில்லாதவனைக் கண்டேன் என வாய்விட்டு உரைக்கின்றான்.*

***“தீது இலன், கண்டேன்”***

***(புறஞ்சேரி இறுத்த காதை,55)***

*மேலும் மதுரையில் கோவலனுக்கும், கண்ணகிக்கும் அடைக்கலம் அளித்த மாதரி கோவலன் இறந்த உடன் ''கோவலன் தீதிலன்'' (நீர்ப்படைக்காதை, 75) என்று கூறி தன் உயிரை மாய்க்கிறாள். இவ்வாறு எதிரெதிர் கோணங்களில் அமைத்து கோவலனைத் தீதற்றவனாக மாற்றி சிலப்பதிகாரத்தையே தீதற்றதாக்கிவிட்டார்.*

**தன் தீதிலா மாதவி**

*கோவலன் கண்ணகியைப் பிரியக் காரணமானவள் மாதவி, எனவே மாதவியைப் படிக்கும்போது வாசகர் மனதில் சிறியதொரு நெருடல் உருவாவது இயல்பு. தன்னுடைய*

*நாட்டியத் திறத்தாலும், அழகாலும் கோவலனை மயக்கிவிட்டாள் என்ற எண்ணம் தோன்றும். கானல் வரிப் பாட்டில் கோவலனே,*

**"மாயப்பொய் பலகூட்டும் மாயத்தாள் பாடினாள்"**

**(கானல் வரி,54)**

*என்று பழித்துரைக்கிறான். இவ்வாறு மாதவியைப் பழித்த கோவலன் மாதவியின் இரண்டாவது கடிதத்தைப் படித்த பின்னர் மாதவியிடம் எந்தத் தவறும் இல்லையென்பதைப் புரிந்து கொள்கிறான்.*

**"தன்தீது இலள்" எனத் தளர்ச்சி நீங்கி,**
**"என்தீது" என்றே எய்தியது உணர்ந்து ஆங்கு"**

**(புறஞ்சேரி இறுத்த காதை, 94-95)**

*என்று கோவலன் மாதவியைப் புகழ்கிறான். எதிலும் அவசர அவசரமாக முடிவெடுக்கும் திறத்தினால்தான் கண்ணகிக்கும், மாதவிக்கும் துன்பம் நிகழ்ந்தது என்று கூறுகிறான். மாதவி குற்றமில்லாதவள் என்பதற்கு மணிமேகலை காப்பியமும் சான்று பகர்கிறது. மணிமேகலையைக் கோவலனுக்கும் கண்ணகிக்கும் பிறந்த மகள் என்றே மாதவி உரைக்கிறாள். இத்தகைய காரணங்களால் மாதவி தீதற்றவளாய் நிற்கிறாள். "கோவலன் கொலையுண்டது கேள்வியுற்றுப் புத்த மாதவர்பால் அறம் கேட்டுப் புத்த பிக்குணியாய் விடுகின்றாள். இவ்வரலாற்றால், அவள் முடிவுகாறும் கோவலனையன்றிப் பிற ஆடவரைக் கருதாத பெருங்கற்புடையவளாய் விளங்கினதை அறிகின்றோம். (ஔவை சு. துரை சாமிப்பிள்ளை, சிலப்பதிகார ஆராய்ச்சி, ப.73) மாதவியின் கற்புத் திறத்துக்கு இவ்வொரு சான்று போதுமானது. "பரத்தையர் குடியிற் பிறந்தும் கற்பிற் சிறந்த மாதவியின் வரலாறு போலப் பிறிதொரு வரலாறு உலகில் காண்பதரிது. ஆடல் இன்பம் - பாடல் இன்பம் - பெண்ணெனும் அமைதி இன்பம் - புவும் காவும் அகிலும் துகிலும் அணியும் பணியும் இன்பத்திற்கோர் இன்பமாய்ப் பழுத்த இன்பம்" இவ்வாறு இன்ப வடிவமாய் விளங்குகிறாள் மாதவி. (சுவாமி சுத்தானந்த பாரதியார், சிலம்புச் செல்வம், ப. viii)*

**தென்னவன் தீதிலன்**

*மதுரைக்காண்டத்தில், மதுரையைப் பற்றியும், பாண்டிய மன்னனைப்பற்றியும் நல்வார்த்தைகளைக் கூறி நம்பிக்கையை ஏற்படுத்துகிறார் ஆசிரியர்.*

**"தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை" (நாடுகாண்காதை, 58)**
**"தீதுதீர் சிறப்பிற் சிறையகம்"(புறஞ்சேரி இறுத்த காதை, 41)**
**"தீதுதீர் மதுரையும் தென்னவன் வாழ்த்தி" (காடுகாண் காதை, 30)**

*என குற்றமில்லாத மதுரை எனவும், மன்னவனது அரசாட்சி குற்றமில்லாதது எனவும் கூறுகிறார். ஆனால் மதுரை வந்த கண்ணகிக்கு தவறு செய்யாமலே கொடுந்துயரம் காத்திருந்தது. மனைவியின் ஊடல் தீர்க்கச் சென்ற பாண்டியன் பொற்கொல்லன் சூழ்ச்சியை அறியாமல் பாண்டிமாதேவியின் காற்சிலம்பு அவன் கையில் இருந்தால் அவனைக் கொன்று அச்சிலம்பைக் கொண்டு வாருங்கள் என்று மதியீனத்தால் கூறிவிட்டான். பொற்கொல்லனது தீயக் குணத்தால் கோவலன் கொலை செய்யப்பட்டான். பாண்டியனுடைய செங்கோல் தாழ்ந்தது. கண்ணகியின் கடுங்கோபத்திற்கு ஆளான மன்னனும், மக்களும் கொடுந்துயருற்றனர். ஆனால் உண்மை தெரியாத மன்னனே என அழைத்த கண்ணகியே வஞ்சிக்காண்டத்தில் தெய்வவடிவில் வந்து தோன்றி,*

***"தென்னவன் தீதிலன், தேவர்கோன் தன்கோயில்***
***நல்விருந்து ஆயினான்; நானவன் மகள்;"***

***(வாழ்த்துக் காதை: 7,8)***

*எனக் கூறுகிறாள். பாண்டியன் தீமை ஏதும் இல்லாதவன், நான் அவனுடைய சொந்த மகளாக விளங்குகின்றேன் எனக் கூறுகிறாள். "தென்னவன் குற்றமற்றவன், குறையுடையவனல்லன் என்பதை எடுத்தோதிய இளங்கோவடிகள், அவன்பால் ஏற்பட்டுள்ள வீண்பகையையும் வெறுப்புணர்ச்சியையும் அடியோடு விலக்கும் அரிய பணியை ஏற்கின்றார். ஏற்ற பணியை இனிதே முடிக்கின்றார்" (மது. ச. விமலானந்தன், சிலப்பதிகாரத் திறனாய்வு, ப.111) காப்பியப் புனைவில் இளங்கோவடிகளின் உச்சநிலையை இப்பகுதியில் அறியலாம்.*

**நிறைவுரை**

1. *தமிழின் முதல் காப்பியமே முழுமுதற் காப்பியமாக அமைந்தது தமிழ்மொழிக்கு கிடைத்த அங்கீகாரம் எனலாம்.*
2. *இளங்கோவடிகள் தனது காப்பியத்தின் ஒவ்வொரு வார்த்தையையும், வாக்கியங்களையும், கதாப்பாத்திரங்களையும் நுண்ணிதின் சிந்தித்துப் புனைந்துள்ளார்.*
3. *காப்பியத்தில் சிறிதளவு குற்றமேனும் வரக்கூடாது என்பதில் அவருடைய கலைத்திறன் வெளிப்படுவதை உணரமுடிகிறது.*
4. *கோவலன் எந்த நன்மையும் இல்லாதவன், தவறு செய்தவன் என்ற எண்ணம் மட்டுமே படிப்பவருக்கு ஏற்படும் சூழலில் கோவலன் தீமை எதுவும் செய்யாதவன் என கோசிகன், மாடலன் வாயால் சொல்ல வைத்து கோவலன் மேல் பரிவு ஏற்படும்படி செய்கிறார் இளங்கோவடிகள்.*
5. *மாதவியைக் கடின வார்த்தையால் பேசிய கோவலனே அவளைத் தீதற்றவள் என்று கூற வைக்கிறார்.*
6. *கண்ணகியின் வாழ்வில் பெருந்துன்பம் உண்டாகக் காரணமான பாண்டிய மன்னனை கண்ணகி வாயாலே தீதற்றவன் என்று கூற வைக்கிறார்.*

*இத்தகைய முடிவுகளை நோக்கும்போது தான் நினைத்ததைச் சொல்லி படிக்கிறவர்களை ஏற்கும்படிச் செய்யும் இளங்கோவடிகளின் கலைத்திறனை நன்கு உணரமுடிகிறது.*

**பயன்பட்ட நூல்கள்**


1. *சிதம்பரனார், சாமி, சிலப்பதிகாரத் தமிழகம், அறிவுப் பதிப்பகம், சென்னை-44, ஜனவரி 2008.*
2. *விமலானந்தன் மது.ச., சிலப்பதிகாரத் திறனாய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108, 1977.*
3. *சுந்தர சண்முகனார், சிலம்போ சிலம்பு, வானதி பதிப்பகம், சென்னை-17, அக்டோபர் 1992.*
4. *சுவாமி சுத்தானந்த பாரதியார், சிலம்புச் செல்வம், அன்பு நிலையம், திருச்சி. 1939.*
5. *துரைசாமிப் பிள்ளை, ஔவை சு, சிலப்பதிகார ஆராய்ச்சி, கழக வெளியீடு, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1, பிப்.1957*
6. *பழநி ஆ, சிலப்பதிகார காப்பியக் கட்டமைப்பு, தமிழினி, சென்னை-14, டிசம்பர் 2007.*

7. *புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம் மூலமும் உரையும், சென்னை-14, 5ஆம் பதிப்பு - 2015.*
8. *முத்துச்சாமி க, முத்தையா ஆ. சிலம்பில் அவலம், பாரிநிலையம், சென்னை-108, 1983*
9. *முனைவர் ஆர் சந்திரன், சிலப்பதிகார வாசிப்பில் உள்ள முரண்பாடுகளும் இடைவெளிகளும், சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்,* Vol:6, Issue.1, E. ISSN: 2582-2810, Pp: 14-26.


## References


1. *Chithambaranar, Saami., Silappathikara Thamizhakam, Arivu Padhippagam, Chennai-44. Jan.2008*
2. *Vimalananthan Math.Sa., Silappathikara Thiranaivu, Manivasagar Pathippagam, Chennai-108, 1977.*
3. *Sundara Sanmuganar, Silambo Silambu, Vanathi Pathippagam, Chennai-17, October-1992.*
4. *Swamy Sudhanantha Bharathiar, Silambu Selvam, Anbu Nilayam, Trichy. 1939*
5. *Duraisamy Pillai, Avvai.S., Silappathikaara Arachi, Kazhaga Veliyeedu, Tirunelveli*
6. *Thenninthiya Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai –01, Feb.1957*
7. *Pazhani A., Silappathikaara Kappiya Kattamaippu, Tamizhini, Chennai – 14.*
8. *Puliyoorkesigan, Silappathikaaram Moolamum Uraiyum, Chennai-14, 5th Edition-2015*
9. *Muthusamy K., Muthaiah A., Silampil Avalam, Paari Nilayam, Chennai- 108. 1983.*
10. *Dr. R. Chandran, Silapathikara Vasippil ulla Muranpadukalum idaivelikalum, Shanlax International Tamil Research Journal, Vol:6, Issue.1, E. ISSN: 2582-2810, Pp: 14-26*